# திருச்செந்தூர்த் தல வரலாறு

திருவாளர் - ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார்
அவர்களால் இயற்றப்பட்டு

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தான
நிர்வாக ஆட்சியாளர்
திருவாளர் - ஜி.கே. பகவதிகவுண்டர், B. A., B. L.,
அவர்களால்

விஷு ஆண்டு ஆனித் திங்கள் 13உ (26-6-1941)
நடைபெற்ற

அஷ்டபந்தன கும்பாபிஷேக
நினைவு மலராகப் பதிப்பிக்கப்பட்டது

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை

விலை அணா 1

உ

குகமயம்

# முன்னுரை

நம் தமிழ் நாட்டில் தற்கால நிகழ்ச்சிகளுள் திருக்கோயில்களின் வரலாறுகள் வெளிப்படுவது ஒன்ருகும். அவ்வரலாறுகள் பெரும்பாலாகத் திருக்கோயில்களின் பண்டைச் சிறப்பும், சரிதமும், இற்றை நிலையும் அறிவிப்பன; ஆராய்ச்சியின்பாற்பட்ட இந்நாள் மக்கட்கு உண்மையைத் தெரிவித்து மயக்கவுணர்ச்சியை நீக்குவன. இவ்வரிய நூல்கள் வெளிப்படுவதற்குக் காரணமாக விளங்குபவர் எனதரிய நண்பரும், சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்து உறுப்பினருமான திருவாளர்-சி. எம். இராமச்சந்திர செட்டியார், B. A., F. R., G. S., அவர்கள் ஆவார். அவரது விருப்பத்தின்படி, திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தான நிர்வாக ஆட்சியாளர் திருவாளர் - ஜி. கே. பகவதி கவுண்டர், B. A., B. L., அவர்கள் தந்த குறிப்புக்கள் துணைகொண்டும், படித்ததும் கேட்டதுமான பொருள்கள் துணைகொண்டும் இச்சிறு நூல் எழுத நேர்ந்தது. இப்பணியில் என்னை யீடுபடுத்திய மேற்கூறிய அன்பர்கள் இருவருக்கும், அச்சுத்தாள்கள் திருத்தியதோடு அழகுபெற அச்சிட்டுதவிய சாது அச்சுக்கூடத்து அதிபர், திருவாளர் - திரு. வி. உலகநாத முதலியார் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

திருவொற்றியூர்
12-6-1941

ரா. சண்முகசுந்தரன்

உ

குகமயம்

# திருச்செந்தூர்த் தல வரலாறு

மாதவஞ்செய் தென்றிசையாய் விளங்குவது நம் தமிழ்நாடு. இத்தகைய சிறப்புக்குக் காரணம் திருக் கோயில்கள் பல விளங்குகின்றமையே. திருக்கோயில் கள் யாவும் எங்கும் வியாபகமாயுள்ள இறைவனை ஒரு வடிவத்தில் பாவித்து வழிபடுவதற்கேற்ற தானங்க ளாகும். அவ்வடிவம் பல. அன்பர்கள் விரும்பும் முறையில் அவை இறைவனால் கொள்ளப்படுவன. அவை களுள் ஒன்று, உயிர்கட்குச் சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் எனும் அசுரர்களால் நேர்ந்த துன்பங்களை மாற்றக்கொண்ட வடிவம் முருகப்பெருமான் திருவுருவ மாகும். அவ்வுருவம் போற்றப்படும் திருக்கோயில்கள் தமிழ் நாட்டில் எண்ணிறந்தனவாயுள்ளன. அவைகளுள் பெருமை வாய்ந்தன ஆறு. அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்பன. இவற்றை முருகப்பெருமான் படைவீடுகள் என்ப. இங்கு இரண் டாவதாகக் குறிக்கப்பட்ட திருச்சீரலைவாய் என்பதே திருச்செந்தூராகும். இது பண்டைத் தமிழ் நூல்களில் திருச்சீரலைவாய் என்றும், திருச்செந்தில் என்றும் குறிக் கப்பட்டது. கடைச்சங்க காலத்திலும், தேவாரத் திரு முறைகள் எழுந்த காலத்திலும் மேற்கூறிய பெயர்களே

வழங்கப்பெற்றன. பின் வரும் எடுத்துக் காட்டுக்களால் அறிக.

> வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
> நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறை.
>
> —புறநானூறு. 55-18-19.

> திருமணிவிளக்கி னலைவாய்ச்
> செருமிகுசேய். —அகநானூறு-266-20-21

> அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே.
>
> —திருமுறுகாற்றுப்படை - 125

> சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்,
> ஏரகமு நீங்கா விறைவன். —சிலப்பதிகாரம்-24

> நஞ்செந்தின் மேய வள்ளி மணாளற்குத் தாதைகண்டாய்.
>
> —அப்பர் - திருமறைக்காடு - திருத்தாண்டகம் - 4

அருணகிரிநாத சுவாமிகள் காலத்து முன்னர் திருச்செந்தூர் என்று வழங்க ஆரம்பித்திருக்க வேண்டும். திருமுறையாசிரியர்கள் காலத்திற்குப் பிற்பட்ட கல்வெட்டுக்காலத்தில் திருச்செந்தில் என்றும், திருச்செந்தியூர் என்றும், திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்கலம் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. அக்காலத்தில் திருச்செந்தூர் என்னும் வழக்குத் தொடங்கப்பெறவில்லை என்பது தெளிவாகின்றது. அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழில் திருச்செந்தூர் என்று கூறுவதால் அவ்வழக்கு அவர் காலத்திற்குச் சிறிது முன்னரே தொடங்கி இருக்கலாம். வடமொழியில் செயந்திபுரம் என்றும், சிந்துபுரம் என்றும் மொழிவர்.

இவ்வூர் திருநெல்வேலிசில்லாவிலுள்ளது. 1911-ம் ஆண்டிலிருந்து திருச்செந்தூர் தாலுக்கா என்ற பகுதிக்குத் தலைநகராக விளங்கி வருகின்றது. திருநெல்வேலிக்

குத் தென்கிழக்கே 38 மைலிலுள்ளது. ரயில் வசதி யுண்டு.

## பழைமை

திருச்செந்தூர் கடலோரமாய் விளங்கும் ஒரு அழகிய நகரம். அதனுள், திருக்கோயில் கடலலை வாயி னிடத்துஅமைந்துள்ளது.காண்போர் கண்கள் கொள்ளை கொள்ளும் கவினையுடையது. இந்நகரம் கண்டவர் அறு முகப்பெருமானையாவர் என்று கந்தபுராணம் கூறும். கிரௌஞ்சமலையும் தாரகாசுரனையும் வென்று தென் றிசை நோக்கி வந்த அறுமுகப் பிள்ளையார் பற்பல தலங்களிலும் தங்கி இறுதியில் திருச்செந்திலில் தங்கி னார். தேவகம்மியனை யழைப்பித்து அங்கு ஒரு திருக் கோயில் அமைக்குமாறு விரும்பவும், அவனும் அழகிய திருக்கோயில் கட்டுவித்தான். அதனை,

அறுமுக னங்க ணேகி யகிலகம் மியனை நோக்கி
இறையிலோர் சினக ரத்தை யியற்றுதி யீண்டை யென்னத்
திறனுணர் புனைவர் செம்மல் சிந்தையி னுடித் தேவர்
உறைதிரு நகரம்வெஃக வொருதிருக் கோயில் செய்தான்.

எனவரும் கந்தபுராணச் செய்யுளாலறிக. இத்திருக் கோயிலில் அறுமுகன் வீற்றிருந்து அசுரர்கள் பண்டைச் சரிதம் யாவும் தேவகுரு சொல்லக் கேட்டார். பின்னர் வீரமகேந்திரபுரம் சென்று பொங்குபோர் பல புரிந்து சூரபதுமன், சிங்கமுகன், பானுகோபன் முதலிய அசுரர் கள் யாவரையுங் தடிந்து திரும்பியபோது மீண்டுந் திருச்செந்தூரில் முருகப்பெருமான் இருந்தருளினார். அவ்வமயம் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர் கள் பெருமானது திருவடிகளில் வணங்கி உவகைகள் கூறினர். அவர்கட்கு அருள்புரிந்து சின்னாள் அங்கு

வீற்றிருந்தருளினார். பல உபகரணங்கள் பெற்றுச் சிவ பெருமானை வழிபட்டனர். இது கந்தபுராணத்தில்,

முழுதொருங் குணர்ந்திடு முருகன் யாவருந்
தொழுதகு மிறைவனாற் றொடர்பு நாடியே
விழுமிய கண்ணுதல் விமலன் றுண்மலர்
வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காதலால்.

எனவரும் திருவிருத்தத்தால் அறிக. முருகப்பெருமான் வழிபட்ட சிவலிங்க மூர்த்தி இன்றும் மூலத்தானத்தில் இருப்பதோடு அம்மூர்த்திக்கும் பூசை முதலியன செய்யப் படுகின்றன.

தேவகம்மியனால் அமைக்கப்பட்ட திருக்கோயில் நாளும் நாளும் பெருகுவதாயிற்று. ஆறுமுக நாயனார் சந்நிதி பின்னர் கட்டப்பட்டது. சுற்றியிருந்த மணற்குன்று சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டுப் பிரகாரங்கள் ஆக்கப்பட்டன. மணற்குன்றே வடபால் ஒரு சிறிது மதிலாக விருப்பதை இன்றுங் காணலாம். இம்மணற் குன்றின் தாழ்வரையில் அரங்கநாதப் பெருமான் உருவம் அமைக்கப்பட்டிருப்பதும் பார்க்கத் தக்கது. அன்பர்கள் பெருகப் பெருகப் பல திருப்பணியாளர்களால் இன்றிருக்கும் திருக்கோயில் ஆக்கப்பட்டது.

இத்திருக்கோயில் முருகப்பெருமான் விருப்பத்திற்கிணங்க வகுக்கப்பட்டதென்றும், சூரபதுமாதியர்களைத் தொலைத்து வந்து இங்குத் தங்கினார் என்றும், வள்ளியம்மையாரை மணஞ் செய்துகொண்ட பின்னும் இங்கு வந்தருளி யிருந்தனரென்றும், திரிசுதந்திரரெனும் முக்காணியரை குடியேற்றினரென்றும், பன்னிருமாதத்தினும் பூசை அவர்களால் வழாது செய்யப்பெற்றனரென்றும், நான்முகன் பூசை யுவந்து வரம் தந்தனரென்றும், வீரவாகுதேவருக்குத் திருக்கோலம் காட்டியருளின

ரென்றும், இவ்வருளை நாரதர், நாராயணர் முதலியோருக்கு அறிவித்தனரென்றும், மாயோன் இந்திரன் முதலிய தேவர்கள் பூசிக்க இருந்தனரென்றும், சுகமுனிவர் சிறப்பான பூசை செய்தனரென்றும் வென்றிமாலைக் கவிராயர் இயற்றிய திருச்செந்தூர்த் தலபுராணம் கூறும்.

இத்திருக் கோயிலில் நான்கு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இரண்டு பாண்டி மன்னனை வரகுண மாறன் காலத்தவை. அதனுளொன்று இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் வேண்டிய நிபந்தங்களுக்கு ஒரு பொருள் நிதி கொடுத்தமை அறிவிக்கும். மேலும் சிறப்பான பூசைகள் மார்கழித் திருவாதிரை, மாசிமகம், வைகாசி விசாகம் முதலிய நன்னாட்களில் நடைபெற்றன என்று தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டின் காலம் கி. பி. 875. மற்றொன்று வேறு பணிகளுக்காக நிதி தந்தமையைக் குறிக்கும்.

மூன்றாவது கல்வெட்டு, பாண்டி மன்னனை மாறவர்மன் காலத்தியது. இப்பாண்டியன், தென்காசித் திருக்கோயில் கட்டிய அரிகேசரி பராக்கிரம சோழன் காலத்திலிருந்தனன் என்று கருதுகிறார்கள். இருந்த காலம் கி. பி. 1282 எனலாகும். நந்தாவிளக்குப் பணி இவ்வாலயத்தில் செய்த குறிப்பு காணக்கிடக்கும்.

நான்காவது கல்வெட்டு, விக்கிரம பாண்டிய தேவர் இத்திருக்கோயிலில் விளங்கும் நக்கீரதேவருக்குத் தனிப் பூசைக்காக நிலங்கள் வாங்கிவிட்டமை அறிவிக்கின்றது. இப்பாண்டியருக்குக் தமிழ்ப்பற்று மிகுதியாயிருந்தமை இவர் செய்த இப்பணி நன்கு விளக்குகின்றது.

பின்னர்ப் பதினைந்தாவது நூற்றாண்டில் விளங்கிய அருணகிரிநாதர் காலத்து, திருச்செந்தூர் மிகப் பிரசித்தி

†

யாய் விளங்கியதென்று அவர் அருளிய திருப்புகழ் மூல மாக அறியக்கிடக்கின்றது. பதினேழாவது நூற்றாண்டில் மேற்கே யிருந்து வந்த டச்சு (Dutch) வர்த்தகர்கள் இங்குத் தங்கி யிருந்தார்களென்றும், சுவாமியின் திருவுரு வத்தைப் பொன் என்று நினைந்து களவுசெய்து கப்பலில் ஏற்றிக் கடலில் சென்றார்களென்றும், அவ்வுருவத்தை உருக்க முயற்சித்தார்களென்றும், அது பயன்படாது போனதென்றும், அவர்கட்கு நேர்ந்த இடுக்கண்களால் அவ்வுருவத்தைக் கடலிலெறிந்தார்க ளென்றும் குறிப்பு கிடைக்கின்றது. அக்காலத்து விளங்கிய நாயக்கர் பரம் பரை அரசர்க்கு வரிவசூலித்துக்கொடுப்பவராகிய பேரன் பர் வடமலையப்பன் பிள்ளையன், பல கலங்களைக் கட்டிக் கொண்டு பல துணைவர்களோடு கடலிற் சென்று, தான் கண்ட கனவின்கண் இறைவன் காட்டிய தனியிடம் நோக்கிவந்து, கடலிற் குளித்து, டச்சுக் கள்ளர்களால் எறியப்பட்ட திருவுருவத்தை மீட்டுக் கொண்டுவந்து பிரதிட்டை செய்தனர். பல நிபந்தங்களும் அமைத்த னர். ஒரு மண்டபமும் கட்டினர். அம்மண்டபம் வட மலையப்பன் மண்டபம் என்று வழங்குகின்றது. இந்தச் செய்தியை எம். ரேன்னல் என்ற பிரான்சு புலவர் ஜெர்மனியில் பெர்லின் நகரத்தில் 1785ம் ஆண்டில், தான் ஒரு டச்சு மாலுமியினிடம் தெரிந்து கொண்ட ஒரு சம்ப வம் என்று வெளியிட்டார். இது 1648ம் ஆண்டில் நிகழ்ந்ததென்று குறிக்கப்படுகின்றது. திருச்செந்தூர் ஆண்டவன் மேல்நாட்டார் யாவரையும் வசீகரப்படுத்தி யுள்ளார் என்று அறிகிறோம். கிழக்கு இந்தியா ஆங்கி லேய வர்த்தகர்கள் ஆளுகையின்கீழ் இந்நாடு விளங்கிய போது அவர்கட்குப் பிரதிநிதியாய்த் திருநெல்வேலியில்

கலெக்டராக விருந்த எஸ். ஆர். லூஷிங்டன் (S. R. Lushington) 1803ம் ஆண்டில் சில வெள்ளிப்பாத்திரங்கள் இத்திருகோயிலுக்குப் பரிசாகக் கொடுத்துள்ளாரென்றும் ஒருகுறிப்பு காணக்கிடக்கின்றது. இவர் திருச்செந்தூருக்கு அடுத்துள்ள பாண்டியன் பட்டினத்தில் ஒரு பங்களா கட்டி வாழ்ந்து வந்தார் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு உலகம் பரவும் பான்மையதாய் திருச்செந்தில் ஆண்டவன் கருணை ஊற்றெடுத்து வழியும் முறைமையதாய் அன்பர் தமக்கு அவரவர் விரும்பிய வாறே அருள்புரிபவனுக விளங்கிவருவது யாவருமறிந்ததே.

## முக்காணியர்

முக்காணியர் என்றழைக்கப்படுபவர் திருச்செந்தூர்த் தலபுராணத்தில் திரிசுதந்திரர் என்று கூறப்படுகின்றனர். அவர்கள் பெருமையை அப்புராணம் சிறப்பாகக் கூறுகின்றது. அவர்கள் அறுமுகப் பெருமானேடு திருச்செந்தூர் வந்ததாகவும், சீலமும், நோன்பும், அடக்கமும், அறிவுமுடையவராய் மேம்பட்டு விளங்கிய காரணத்தினுல் அவர்களது இரண்டாயிரங் குடும்பங்கள் அங்கே நிலவச் செய்யப்பட்டன வென்று ஒரு குறிப்பு கிடைக்கின்றது. தற்சமயம் ஆயிரங் குடும்பங்களே வுள்ளன என்ப. அவர்களே மிக்க சிரத்தையுடன் திருச்செந்திலாண்டவன் பூசைகளை வழாது செம்மைபெறச் செய்து வந்தனரென்று அறியக்கிடக்கின்றது.

## திருக்கோயில் அமைப்பு

திருச்செந்தூர்த் திருக்கோயில் இயற்கை யழகு பெற்றுள்ளது. வெள்ளிய கடற்றிரைகள் வடக்கிலும் கிழக்கிலும் வீசுகின்ற அரிய காட்சி புலனுகும். இவ்

வாலயத்திற்கு வாயில்கள் தெற்கிலும் மேற்கிலுமுண்டு. கிழக்கிலுள்ள வாயில் அடைப்பட்டிருக்கும். தெற்கு வாயிலிலுள்ளது ஆறுமுக விலாசம். ஆங்கு ஓர் அழகிய மேடை மண்டபமுண்டு. அம்மண்டபத்திற்கு நேரே உள்ளது ஆறுமுக நாயனுர் சந்நிதி. அதற்கடுத்து.கிழக்கு நோக்கிய சந்நிதியாயுள்ளது மூலத்தானம். இரண்டு பிரகாரங்களுள்ளன. முதற் பிரகாரத்தில் உற்சவ மூர்த்தங்களும் சிலாமூர்த்தங்களும் வைக்கப்பட்டுள்ளன.

## தீர்த்தங்கள்

ஸ்கந்த புஷ்கரணி, சிந்து தீர்த்தம், தெய்வயானை தீர்த்தம், வெள்ளைவாரண தீர்த்தம், வயிரவ தீர்த்தம், குறக்கொடி தீர்த்தம். பாவநாச தீர்த்தம், சேது தீர்த்தம், தசகங்கை தீர்த்தம். இவை திருச்செந்தூர்த் தலபுராணத்தில் பேசப்படுகின்றன. திருக்கோயிலுக்குத் தெற்கே **நாழிகிணறு** ஒன்றுண்டு. கடலோரத்தில் உப்புத் தண்ணீரன்றி நல்ல தீர்த்தம் கிடைப்பதரிது. திருவருள் சுரக்கும் பான்மைபோல் நாழிகிணறு நன்னீர் உதவுகின்றது. எடுக்குமளவே சுரந்து இயல்பாயிருக்கும் அளவிற்குமேம்படாதும் குறைபடாதுமிருப்பது எவரும் வியக்கத்தக்கது.

## தினப் பூஜை

இத்திருக்கோயிலில் நாடோறும் காலங்கள் உதய மார்த்தாண்டம், காலை, உச்சி, விளா, அர்த்தசாமம் என அழைக்கப்பெறுகின்றன. உதயமார்த்தாண்ட கட்டளையைப் பலபடியாகத் திருவாளர்கள் கு. இராமசாமி ஐயர், இளையரசனேந்தல் ஜமீன்தாரர், சேவல்பட்டி ஜமீன்தாரர், குமாரசாமி முதலியார், திருவிதாங்கூர் எஸ்டேட்டு அதிகாரிகள், திருவேங்கடம் பிள்ளையவர்கள்

உதவ நடைபெறுகின்றது. காலை சந்திக்கு உதவுபவர்கள் திருவாளர்கள் - ஆவுடையப்ப பிள்ளை, சங்கரநாராயண ஐயர், தியாகராய செட்டியார், இளையரசனேந்தல் ஜமீன்தாரர், எட்டயபுரம் ஜமீன்தாரர், எஸ். பி. சுப்பிரமணிய பிள்ளை, இராமநாதபுரம் ஜமீன்தாரர், சத்தி ஐயர் வகை, முத்துக்குமாரசாமி பிள்ளை, ஊத்துமலை ஜமீன்தாரர். உச்சிகாலத்திற்கு உபகரிப்போர் திருவாளர்கள் - சுந்தர சுப்பிரமணிய ஐயர், குருவிகுளம் ஜமீன்தாரர், உலகநாதம் பிள்ளை, அய்யாச்சாமி பிள்ளை, சரவணசாமி ஐயர், தாணு. சுப்பிரமணிய ஐயர், சிவகிரி ஜமீன்தாரர், திருவாட்டி. செல்லத்தம்மாள். விளா பூஜைக்குச் சேத்தூர் ஜமீன்தாரரும், சிவகங்கை ஜமீன்தாரரும் உபகரிக்கின்றனர். அர்த்தயாம பூஜை திருவாளர்கள் - பி. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களாலும், குஞ்சு ஐயர் வகையராக்களாலும் நடைபெறுகின்றது. மூலத்தானத்தில் ஏகாந்தக்கட்டளை ஊர்க்காடு ஜமீன்தாரரால் செய்யப்பெறுகின்றது. திருமஞ்சனக் கட்டளை திருவாட்டி. சி. பொன்னம்மை நாடாத்தியால் நிறைவேறுகின்றது.

## ஆண்டு விழாக்களும் உபயக்காரர்களும்

சிறப்பாக நடைபெறும் விழாக்கள் மூன்று என்று கூறுதல்வேண்டும். அவை ஆவணி ஐப்பசி மாசி மாதங்களில் நடைபெறுகின்றன. ஆவணி மாசி மாதங்களில் நிகழ்வது பெரிய திருவிழாக்கள். ஐப்பசியில் நடப்பது கந்தர்கஷ்டி திருவிழாவாகும்.

**ஆவணித் திருவிழாக்கள் :**

**2, 7, 8, 9, 10**-ம் திருநாட்கள் :—

கண்சாத்து-திரு. மு. அரிஹரமய்யர் வகை.

5-ம் நாள் மண்டபடி-இராமநாதபுரம் சமஸ்தானம்.
6-ம் ,, ,, திருவாவடுதுறை யாதீனம்.
7-ம் நாள் ,, திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை
வெள்ளைச்சாத்து-திரு. தெய்வயானையம்மாள்.
8-ம் நாள் மண்டபடி ஊத்துமலை ஜமீன்தாரர்.
9-ம் ,, ,, திரு. சுந்தர சுப்பிரமணிய ஐயர்.
10-ம் ,, ,, திரு. குமாரசுவாமி முதலியார்.
11-ம் நாள் தெப்போற்சவம் திரு. திருவேங்கடம் பிள்ளை.

மாசித் திருவிழாக்களும் இவ்வுபயக்காரர்களே அவ்வத் திருவிழாவை முடிக்கின்றனர். இம்மாதத்தில் ஏழாம் நாள் திருவிழாவில் திருவிதாங்கூர் எஸ்டேட் அதிகாரிகள் தீவட்டி எண்ணெய் கட்டளை அமைத்துள்ளார்கள்.

**கந்தர்சஷ்டி திருவிழாக்கள் :**

1-ம் நாள் திருவாவடுதுறை யாதீனம்
3-ம் ,, திரு. முத்துக்கிருஷ்ண முதலியார்
5-ம் ,, திரு. வீரபாகு பிள்ளை
7-ம் ,, தெய்வயானையம்மையார் திருக்கல்யாணவிழா-
திரு. எட்டயபுரம் ஜமீன்தாரர்.

அன்று நடைபெறும் ஊஞ்சல், திருவாட்டி கருப்பாயியம்மையார் உதவியால் செய்யப்படுவதாகும்.

வைகாசி மாதத்தில் விசாகத் திருவிழா மிகச் சிறப்புடையது.

வசந்தோற்சவம் திரு. திருவேங்கடம் பிள்ளை அவர்களால் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா திரு. சங்கரநாராயண பிள்ளையவர்களாலும், சனிக்கிழமை விழா திரு. திருவேங்கடம் பிள்ளையவர்களாலும் நடத்தப்படுகின்றன. மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழா திரு. திருவேங்கடம் பிள்ளையவர்கள் நன்முயற்சியாலாவது. மற்றமாதங்களில் நடை

பெறும் விழாக்கள், மேற்கூறிய மாதங்களில் நிகழும் இதரவிழாக்கள் பொதுநிதியிலிருந்து செய்யப்பெறுவன. மாதந்தோறும பிரதோஷக் கட்டளை சேத்தூர் ஜமீன் தாரர் அவர்களால் நிறைவேறுகின்றன.

## திருவிளக்குகள்

பல அன்பர்கள் நன்முயற்சியால் எண்ணெய், நெய் விளக்குகள் மிகுதியா யிருப்பினும், தேவஸ்தானத்து நிதியிலிருந்து இடப்பட்ட மின்சார விளக்குகள் அழகு செய்கின்றன.

## தண்ணீர்ப் பந்தர்கள்

பகற்போதில் வெப்பம் மிகுதிப்படும் கடற்கரையில் தண்ணீர்ப்பந்தர்கள் இன்றியமையாதன. திருப்பணி மடம் சார்பாகத் திருவாளர், வெள்ளூர். சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் மேலைக்கோபுரமருகில் ஒரு தண்ணீர்ப்பந்தர் அமைக்கப் பட்டுள்ளது. ஆறுமுக விலாசத்தில் திரு. தி. அரு. அ. வெ. அண்ணமலை செட்டி யார் அவர்கள் ஒரு தண்ணீர்ப் பந்தரை நடத்துகின்றனர். மணல்மேட்டிலுள்ள கல்மண்டபத்தில் தேவஸ்தானத் தார் ஒரு தண்ணீர்ப் பந்தரை அமைத்துள்ளார்கள். இவையாவும் தண்ணளி செய்யுந் தன்மையனவாய் விளங்குகின்றன.

## ஆலய நிர்வாகம்

1928-ம் ஆண்டுவரை பல செல்வர்களும், அடிகளா ரும், முக்காணியர்களும் தர்மகர்த்தர்களாக இருந்து காரியம் பார்த்துவந்தனர். மேற்கண்ட ஆண்டில் சென்னை இந்துமத அறநிலையங்கள் பாதுகாப்புக்கழகத் தார் ஒருதிட்டம் (Scheme) அமைத்தனர். அது O.S.No. 4 of 1929 என்ற எண்ணுள்ள வழக்கிலை திருத்தப்

பட்டுத் திருவாளர். இலஞ்சி. தி. எஸ் முத்துக்குமார சுவாமிபிள்ளை அவர்கள் தனித்தர்மகர்த்தராக நிர்வாகஞ் செய்து வந்தனர். பின்னர் அத்தானம் தூத்துக்குடி வட்டம் திருக்கோயில் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட திருவாளர். எ. சி. எஸ். கந்தசாமி ரெட்டியாரால் வகிக்கப் பட்டது. அவருக்குக்கீழாக பல ஸுப்பிரண்டெண்டுகள் வேலைபார்த்து வந்தனர். அவர்கள் திருவாளர்கள். தி. சங்கரலிங்கம் பிள்ளை, சி. எஸ். ஆறுமுகம் பிள்ளை எம். ஆர். சண்முகசுந்தரம், எ. முத்தையபிள்ளை ஆவார். தற்காலம் திரு. ஜி. கெ. பகவதி கவுண்டர், B. A. B. L., அவர்கள் தனிநிர்வாக ஆட்சியாளராக இருந்து வருகின்றனர்.

## சோத்துக்கள் வீடு முதலியன

திருச்செந்தூர் தாலுகாவில் இனும் கிராமம் புத்தன தருவை என்பது ஒன்ருகும். அம்பா சமுத்திரம் தாலுகாவில் ஓமநல்லூரிலும் சேரமாதேவியிலும் நிலங்களுள்ளன. ஓமநல்லூரிலுள்ள நிலங்கள் கிரயத்திற்கு வாங்கப் பட்டன. ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் பேரூர் கிராமத்திலும் நிலங்கள் வாங்கப்பட்டன. திருப்பணிசெட்டியாபத்து, பேரூரணி, இராமசாமிபுரம் எனும் இனும் கிராமங்கள் வாங்கப்பெற்றன. திம்மராஜபுரம், மகிழம்மபுரம் எனும் கிராமங்கள் ஸ்ரீ ஆறுமுகசுவாமி அவர்களால் வாங்கி உபகரிக்கப்பட்டன. O. S. No. 57 of 1932 என்ற எண்ணுள்ள வழக்கு வகையாகத் திருவாளர் - பி. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சொத்துக்கள் சுமார் ரூ. 78000 மதிப்புள்ளவை இத்தேவஸ்தானத்திற்குச் சேர்க்கப்பட்டன. திருச்செந்தூரில் பல வீடுகள், பங்களாக்கள், கடைகள் உள்ளன.

## வருட வருமானம்

நிலங்களிலிருந்து ரூ. 30,000-ம், வீட்டு வாடகைகளால் ரூ. 3000-ம், உபயம் உண்டியல் இவைகளால் ரூ. 37,000-ம், சர்க்கார் தஸ்திக்கால் ரூ. 17,800-ம், இதர வரும்படியால் ரூ. 20,000-ம் கிடைக்கின்றன, இதர வரும்படிகளில் சேர்க்கப்பட்டவை, காவடி வசூல்· அருச்சனை, தேங்காய், பனிநீர் விற்பனைகள் ஆகும்.

## திருவாபரணங்கள் முதலியன

திருவாபரணங்கள் எண்ணிக்கை அளவிறந்தன எனலாம். உயர்ந்தவை மிக்கனவாயுள்ளன. வெள்ளி பொன் பாத்திரங்கள் அதிகம். விளக்குகள் எண்ணிறந்தன. பட்டாடைகள் விலையுயர்ந்தனவை மிகுதியாயுள்ளன.

## கால்நடைகள்

மாடுகள், கோழிகள், மயில்கள் ஆகிய இவை பிரார்த்தனையாக விடப்படுகின்றன. அவ்வப்போது இவைகளை விற்றுப் பொதுநிதியில் சேர்க்கப்படுகின்றன. திருவிதாங்கூர் சமஸ்தானத்தார் எப்போதும் ஒரு யானை உபகரித்து வருகின்றனர்.

## வாகனங்கள்

மிகச் சிறப்பான தங்கமுலாம் பூசிய வாகனங்களும் வெள்ளி வாகனங்களுமுண்டு. மரத்தினாலாக்கப்பட்ட வாகனங்களுமுள்ளன. யானை, மயில், பெருச்சாளி, குதிரை, ஆனை விளாஞ்சிப்புள், அன்னம், கமலம் ஆக இவை வெள்ளியினாலுள்ளன. மயில் வாகனங்கள் அநேகம். பற்பல விசேட தினங்களில் மாறி வருவன

வாகும். முத்துக்கடா, கைலாச பருவதம், நாயனூர் சப்பரம் ஆக இவை தங்கமுலாம் பூசப்பட்டவை. இந்திர வாகனம், பல்லக்குகள், தேர்கள் ஆக இவை மரத்தினுல் செய்யப்பட்டுள்ளன. இவை யாவும் ரூபாய் 37,292 மதிப்பிடப்பட்டுள்ளன.

## சுற்றுக் கோயில்கள்

இத்தேவஸ்தான நிர்வாக அதிகாரிகளால் கீழ்க்கண்ட கோயில்கள் நிர்வாகஞ் செய்யப்பட்டு வருகின்றன.

1. பெருமாள் கோயில். 2. குகை வள்ளியம்மன் கோயில். 3. தூண்டுகை விநாயகர் கோயில். 4. சுவர்ண வன சாஸ்தா கோவில். 5. சிவக்கொழுந் தீஸ்வரர் கோயில். 6. அமிர்தகுண விநாயகர் கோயில். 7. அனந்த சாஸ்தா கோவில். 8. சொக்கர் கோயில். 9. ஆட்கொண்ட விநாயகர் கோயில். 10. மரகதவல்லியம்மன் கோயில். 11. முத்தாரம்மன் கோயில். 12. அரசாள் வார் கோயில். 13. உச்சினிமாகாளியம்மன் கோயில். 14. வெயிலுகந்தம்மன் கோயில். 15. சபாபதி விநாயகர் கோயில். 16. தலையூன்றி சாஸ்தா கோயில். 17. குன்று மேலையன் சாஸ்தா கோவில். 18. சரவண விநாயகர் பிறப்புடைய கோயில்.

## திருப்பணிகள்

கல்வெட்டுக் காலத்திற்குமுன் செங்கல்லால் ஆக்கப்பட்ட திருக்கோயிலிருந்ததெனலாம். கற்றிருப்பணி ஒன்பதாம் நூற்றுண்டில் பாண்டிமன்னனுன வரகுண மாறன் காலத்திற்குமுன் செய்யப்பட்டிருக்க வேண்டும், கல்வெட்டுக்கள் இம்மூலத்தானக் கோயிற் சுவர்களில்

விளங்குகின்றமையான் ஆறுமுக நாயனார் சந்நிதி கல்வெட்டுக் காலத்திற்குப்பின் கட்டப்பட்டது. பாண்டி மன்னர்கள் ஆதிக்கம் குறைந்த பின் திருமடங்கள் பார்வையில் திருக்கோயில்கள் வந்தன. திருச்செந்தூரில் திருப்பணி மடம் ஒன்று விளங்கியது. அம்மடம் திருச்செந்தூர் ஆண்டவன் திருக்கோயிற் றிருப்பணியில் நுழைந்திருந்தமையால் இப்பெயர் பெற்றது எனக்கூறலாம். காலங் கழியக்கழிய அம்மடம் திருவாவடுதுறையாதீனக் கர்த்தர்கள் கைவசமாயிற்று. ஆதீனத்தார் சில திருப்பணிகள் செய்தனர். பின்னர் காசிச்சாமி என்ற அடிகளார் திருப்பணியைப் பலர் பொருளுதவி கொண்டு தொடங்கினர். இவருக்குப் பின் மௌன சுவாமிகளும், 1915-ம் ஆண்டு முதல் ஆறுமுக சுவாமிகளும் மிக்க அன்போடு திருப்பணியே தங்களது போக்காக முயன்றனர். ஆறுமுகசுவாமிகள் தொண்டுகள் அளவிடவரிதாகும். தேவஸ்தானத்தில் ஆண்டுதோறும் ரூபாய் 15000 பெறுவதுடன் பல பேரன்பர்களிடத்தும் பொருள் பெற்று திருப்பணி யாவும் முடித்தனர். மிகுந்த பொருள் கொண்டு திம்மராஜபுரம், மகிழும்மபுரம் ஆகிய கிராமங்களை வாங்கித் திருச்செந்தில் நாதனுக்கே உரிமையாக்கினர். வள்ளநாயகி சுவாமி என்ற அடிகள் எப்பக்கங்களிலும் நடை வசதிக்காக சிமிட்டித் தூண்கள் நிறுத்தி மேல்பரப்புஞ்செய்து நடைமண்டபங்கள் கட்டியுள்ளனர். ஆறுமுகவிலாசம், மற்றும் மண்டபங்கள் ஆக்கப்பட்டன. தங்கவசதிக்காகப் புதியதொரு மண்டபம் மணல் மேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, அது வேலை முடிவுபெற்று வர்ணம் தீட்டப்பெறவில்லை.

## திருச்சேந்தூர் ஆண்டவன்மீது நூல்கள்

1. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப் படையுள் இரண்டாவது படைவீடு.

2. அருணகிரிநாதர் - திருப்புகழ்.

3. குமரகுருபர சுவாமிகள் - கந்தர் கலிவெண்பா.

4. துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகள் - திருச் செந்தினீரோட்டக யமக வந்தாதி.

5. திருச்சிற்றம்பல நாடிகள் - திருச்செந்தூரகவல்.

6. பகழிக்கூத்தர் - திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

7. சருக்கரைப்புலவர் - திருச்செந்தூர்க்கோவை.

8. திருவாவடுதுறை யாதீனம் - சுவாமிநாததேசிகர் - திருச்செந்திற் கலம்பகம்.

9. வென்றிமாலைக் கவிராயர் - திருச்செந்தூர்த் தல புராணம்.

10. சரவணப்பெருமாட் கவிராயர்-கந்தவருக்கச் சந்த வெண்பா.

11. பாம்பன் - குமரகுருதாச சுவாமிகள் - திருவலங் கற்றிரட்டுள் - திருசீரலைவாய் - திருச்சிந்துபுர:

உ

குகமயம்

# தோத்திரப் பாடற்றிரட்டு

**திருநாவுக்கரசு சுவாமிகள் :**

*கள்ளிமுது காட்டி லாடி கண்டாய்*
*காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்*
*புள்ளியுழை மானின் றோலான் கண்டாய்*
*புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்*
*வெள்ளிமிளிர் பிறைமுடி மேற்சூடி கண்டாய்*
*வெண்ணீற்றான் கண்டாய் நஞ்செந்தின் மேய*
*வள்ளிமணா ளற்குத் தாதை கண்டாய்*
*மறைக்காட் டுறையு மணாளன் றானே.* (4)

—திருமறைக்காடு - திருத்தாண்டகம்.

**நக்கீரர் :**

*வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்*
*வாடா மாலை யோடையொடு துயல்வரப்*
*படுமணி யிரட்டும் மருங்கிற் கடுநடைப்*
*கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்*
*கால்கிளர்ந் தன்ன வேழ மேற்கொண்டு*
*ஐவே றுருவின் செய்வினை முற்றிய*
*முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி*
*மின்னுறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப*
*நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை*
*சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ*
*அகலா மீனின் அவிர்வன விமைப்பத்*
*தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்*
*மனன்நேர் பெழுதரு வாள்நிற முகனே*
*மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்*
*பல்கதிர் விரிந்தன் றொருமுகம் ; ஒருமுகம்*
*ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்*

காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே ; ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே ; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே; ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே; ஆங்குஅம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை;
அங்குசம் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகு வலம்திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவைசூட்ட; ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆருக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதாஅன்று.

—திருமுருகாற்றுப்படை - திருச்சீரலைவாய்

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே. (5)

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். (7)

—திருமுருகாற்றுப்படை - வெண்பா

**அருணகிரிநாதர் :**

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூறக்
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீரக்
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ ;
மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமார்பு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா
அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே.

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே
முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு முனைமீதே

திந்திமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது வருவாயே.
அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே
அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேலைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தில்நகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.
—திருப்புகழ்.

குமரகுருபர சுவாமிகள் :

* * * * * * *
* * * * * - தேசுதிகழ்
பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி - யாங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமுந் - தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப - விரிபுவனம்
எங்கும் பரக்க விமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண்
எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு
பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்

சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் - போதொருசற்று
அன்னவளுங் கொண்டமைதற் காற்ருள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய் - முன்னர்
அறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன் - குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவ மாறினையுந் - தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறு மொன்ருக மேவுவித்துச் - செய்ய
முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச் - சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்து
உள்ள முவப்ப வுயர்ந்தோனே - கிள்ளைமொழி
மங்கை சிலம்பின் மணியொன்ப திற்ருேன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து - தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குள் முன்ேருன்
மருப்பாயுந் தார்வீர வாகு - நெருப்பிலுதித்து
அங்கட் புவன மனைத்து மழித்துலவுஞ்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந் - தெங்கோன்
விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந் தெண்டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா - படைப்போன்
அகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்று
உகந்த பிரணவத்தி னுண்மை - புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே - மட்டவிழும்
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே - கொன்னெடுவேல்
தாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே - சீரலைவாய்த்
தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச் - சயேந்திரனுஞ்

சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே - காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப் - பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் - சகமுடுத்த
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய் - போரவுணன்
அங்கமிரு கூறு யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னூர்த்தெழுந்து தோன்றுதலும் - அங்கவற்றுட்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்து மிளையோனே - மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே - மூவர்
குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே-மறைமுடிவாஞ்
சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே-பொய்விரவு
காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்-பூமருவு
கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து - மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - யுள்ளமுவந்து
ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே - நாறுமலர்க்
கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
**செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே** * *
* * * * * * * * *

—கந்தர் கலிவெண்பா

**துறைமங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகள் :**

காதலை யானின் றனக்காக் கினனினிக் காயந்தந்தே
காதலை யானின் றனக்கா ரணனடிக் கஞ்சங்கணீங்

காதலை யானின்ற கங்கரைந் தேத்தரன் கண்ணியராக்
காதலை யானின்ற சங்கரன்சேய் செந்திற் காங்கேயனே (29)
—திருச்செந்தினிரோட்டக யமக வந்தாதி

**திருச்சிற்றம்பலநாடிகள்**

நந்தூ ரலைவாயில் நண்ணியுல கேத்தவொளிர்
செந்தூர்த் திருவகவல் செப்புவேன்—இந்தூருஞ்
செஞ்சடையான் யானைச் சிரமுடையான் அன்பிலிகள்
நெஞ்சடையான் பாத நினைந்து.

—

ஓமெனுந் தாரக வொண்பொருள் சிவனுக்
காமென மொழிந்தே அருட்குரு வானோன்

*   *   *   *

*   *   *   *

சாகா வரமுந் தந்திடு முடம்பிற்
போகாப் பீடை போக்கி ரட்சிக்கும்
வறுமை நீங்கும் வாழ்வுண் டாகுஞ்
செறிதரு மட்டமா சித்தியுங் கொடுக்குஞ்
சரியை கிரியை சார்ந்திடு மியோகந்
தெரிதரு ஞானமுஞ் செறிந்து வாழ்குவரே.
—திருச்செந்தூரகவல்

**பகழிக் கூத்தர் :**

கத்துந் தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்ட றருமித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலையில்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.
—திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் - முத்தப்பருவம் - 1

பேரா தரிக்கு மடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய்த் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா வென்றுன் றிருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.
— ௸ வருகைப் பருவம் - 9

**திருவாவடுதுறையாதீனம் - சுவாமிநாத தேசிகர் :**

தாமரை பயின்ற நான்முகக் கடவுள்
எழுதா மறைப்பொருட் பழுதாங் குரைப்ப
வீங்கு மணிக்கடகந் தாங்கு திணிதடக்கை
முன்வருத் தியவா றின்னமும் வருத்த
விரும்பிய தாலெனத் திரும்பிட நஞ்சேய்
பாயிருள் பருகும் பல்கதிர்க் குழவி
ஞாயிறு சுறவெறி நாண்முரி திரைமுகட்டு
எழுவது போல மழைதழை கலாபச்
செறிமயிர்ச் சிறையார் பொறிமயிற் புறத்துச்
சேயொளி மேனி திகழவீங் கெழுந்தனை
தெய்வவான் கரிணியு மொய்வரை யரிணியுந்

*தூவலங் கயிலுஞ் சேவலங் கொடியும்*
*ஆறு முகமு நீறணி புயங்களும்*
*பண்டைய மறைபுகழ் தண்டையந் தாள்களுங்*
*கந்தநின் னுமமுஞ் செந்திலம் பதியும்*
*வணங்கவு நினைக்கவும் வாழ்த்தவும்*
*இணங்கலிற் பரவினே னெனைவிதித் ததற்கே.* (5)

—திருச்செந்திற் கலம்பகம்

***வென்றி மாலைக் கவிராயர் :***

*கருணைமா ருதுள் ளூறுங் கண்கள்பன் னிரண்டி னாலே*
*இருவினை களைந்த மேலோர்க் கினியவா னந்த மெல்லாம்*
*வரன்முறை பெருக்கி யன்னார் மனமெனுங் கோயிற் றூண்டாத்*
*திருவிளக் கொளியாம் வைவேற் செயந்தியம் பதியாய் போற்றி.*

—திருச்செந்தூர்த் தலபுராணம்

***சரவணப் பெருமாட் கவிராயர் :***

*செந்தினக ராள்சோமன் றேவர்முத லோர்பரவச்*
*செந்தினக ராள்பரம தேசிகா—வந்தெதிரே*
*முத்தனைவ லைத்தரிமு றக்குமத னுக்குமதி*
*சித்தனைவ லைத்தழுவல் செய்.* (31)

—கந்த வருக்கச் சந்தவெண்பா

**பாம்பன் - குமரகுருதாச சுவாமிகள் :**

*கிளர்சிவக் கொழுந்தே தவர்மனக் கரும்பே*
*கெழுவருண் மாமணிக் குலமே*
*வளர்நலக் கிழியே யகவிளக் கொளியே*
*மனமய றீர்க்குமெம் பரனே*
*களிமனத் துமையா ளருள்ரசக் கனியே*
*கயநிலைச் சீரலை வாயா*
*தனைமணிச் சரணு வுனைமறக் கினுநா*
*சாற்றிடுஞ் சரவண பவவே.*

—திருவலங்கற்றிரட்டு - திருச்சீரலைவாய் - 5

*பெற்றவ ரும்மறப்பார் பிறந்தார் மகரும் மறப்பார்*
*உற்றவ ளும்மறப்பா ளொருகா லமுநீ மறவாய்*
*அற்ற மறுத்தருள் வோருனை யன்றி யெவருளரே*
*தெற்றென வாட்படு வார்க்கருள் சிந்து புரத்தானே*

—திருவலங்கற்றிரட்டு - திருச்சிந்துபுரம் - 8